விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 357 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 25 வியாழக்கிழமை (11.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

# தமிழர் தாயகத்தில் உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)



உலகளாவிய ரீதியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவு இறங்குதுறையில்

## கடலில் தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவு 15ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி திருவையாறில்

## டிப்பர் மோதியதில் குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - திருவை 15ஆம் பக்கம் பார்க்க

ரூ.25 ஆயிரம் வழங்க மறுப்பு

## யாழில் கிராம சேவகருக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பேரிடரின்போது யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட வீட்டிற்கு 25 15ஆம் பக்கம் பார்க்க




## யாழ்ப்பாணத்தில் வெள்ள நிவாரணத்தில் பாரியளவு நிதி மோசடி

கண்டுபிடித்துவிட்டதாக பிதற்றும் கம்மன்பில



(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் மோசடி இடம்பெற்றது. எனவே அரசாங்கம் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என 15ஆம் பக்கம் பார்க்க

## கோட்டாபய யாழ்ப்பாணம் வருவதில் என்ன பாதுகாப்பு அச்சுறுத்தல்



### சத்தியக்கடதாசியை சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதில் என்ன பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்பதை நியாயமான காரணங்களுடன் 03ஆம் பக்கம் பார்க்க

## நிவாரண பொருட்களுடன் ரஷ்ய விமானம்

(கொழும்பு)

அனர்த்த நிவாரண உதவிகளை ஏற்றிய ரஷ்யாவின் விசேட சரக்கு விமானம் ஒன்று நேற்று (10) மாலை கட்டுநாயக்க 15ஆம் பக்கம் பார்க்க

யாழில் ரூ.25 ஆயிரம்

## உதவி பெறுவோரின் பெயர் நேற்று முதல் காட்சிக்கு

(யாழ்ப்பாணம்)


பேரிடரால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி பெறத் தகுதியானவர்கள் எனத் தெரிவானோரின் பெயர்கள் அடங்கிய விபரங்கள் நேற்றுப் புதன்கிழமை முதல் பிரதேச செயலக ரீதியாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 - 02 - 1947

மறைவு 10 - 12 - 2025

## நன்னித்தம்பி ஜெயரங்கநாதன் (வாசையா)

ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் V-H ஒழுங்கை, இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி ஜெயரங்கநாதன் அவர்கள் நேற்று 10.12.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - லீலாவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் கௌசலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவலோகநாதன், சகுந்தலா, அருணகிரிநாதன் மற்றும் வசந்தலா, கைலையங்கிரிநாதன், நிர்மலா, ஜெயந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, நகுலேந்திரராஜா மற்றும் கருணாதேவி, யோகேந்திரராஜா, புவனேந்திரராஜா, பவானி, காமினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.12.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
(6126) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 04 - 1933

மறைவு 10 - 12 - 2025

## திருமதி
## பாக்கியம் கணபதிப்பிள்ளை


கார்த்திகேசர் வீதி, புலோலி தென்மேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (10.12.2025) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சரஸ்வதி தியாகராஜன் அவர்களின் அன்புச் சகோதரியும் பாலகணேஷ், பாலமுருகாம்பிகை, பாலமுரளி, பாலநந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு.சி.ரஞ்சன், பா.ஜெயந்தி, பா.லக்ஷிதா, கி.சந்திரகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலபத்மன், கீர்த்தனா, கோபிதன், சுவேதா, அகல்விழி, சபேகன், சபேகா, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2025) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
(C-4541) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 22.10.1940

உதிர்வு 07.12.2025

## திருமதி தெய்வானைப்பிள்ளை நமசிவாயம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை நமசிவாயம் அவர்கள் கடந்த 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், நாகரத்தினம், தர்மலிங்கம், வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாதேவன், ஸ்ரீவாமதேவன், சகாதேவன், இரத்தினேஸ்வரி, வாமதேவன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, வசந்தாதேவி, சறோஜாதேவி, காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன், சாரதா, சிவரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கஜேந்தினி, கமலினி, பிரேமினி, சுஜேந்தினி, மயூரன், கவிசங்கர், பவிசங்கர், தீபிகா, டினேஸ், சங்கீதா, பிரசாந், சாளினி, சுகன்யா, காலஞ்சென்ற சுகன்யா, யசோதரன், கமலதர்சன், வினோயன், சாமுவேல், இஸ்ரெலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மோனிசா, கருனீசன், கிஷான், யஸ்வினி, தனிசா, வர்னிஷா, கபிஷன், அக்ஷனா, ஆரியன், மிலான், மார்க், டினுஜா, ஹேனுகா, அபிஷன், கம்சாயினி, கர்ணிகா, ஒலிவியா, ரயன், எட்வின்ஜோயல், லியான்டேவ், மைக்கல் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 12.12.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

துவாளி வீதி,
உடுப்பிட்டி வடக்கு,
உடுப்பிட்டி.

தகவல் :
(C-4544) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் வந்து குடியேறுங்கள்

## மலையகத் தமிழ் மக்களுக்கு அழைப்பு

**(யாழ்ப்பாணம்) ..........................................**

**மலையக தமிழ் மக்களை இனியும் ஆபத்தான மலை விளிம்புகளில் இருக்காமல் வடக்கிற்கு வருமாறு சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அழைப்புவிடுத்துள்ளார்.**

நல்லைநகர் ஆறுமுகநாவலரின் குருபூஜை நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

மேலும் தெரிவிக்கையில்,

மலையக தமிழ் மக்களிடம் நாங்கள் நிலம் தருகிறோம். நீங்கள் வடக்கில் வந்து குடியேறுங்கள், வடக்கில் எவ்வளோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது.

வடக்கில் எவ்வளவோ நிலம் இருக்கு என்று அவர்களை நாம் கூப்பிட வேண்டும். இதுவே மனித நேயம், இதுவே தர்மமாகும்.

மலையகத்திலிருந்து தமிழ் மக்கள் யாராவது வடக்கில் குடியேற வந்தால், எல்லா கோயில் காணிகளிலும், எல்லா சிதம்பரத்து காணிகளிலும், எல்லா தர்ம காணிகளிலும் அவர்களை குடியேற்றி அவர்களை காப்பாற்ற வேண்டும். அதற்கு எங்களை நாம் தயாராக்க வேண்டும். இதற்கு எம்மை போன்றவர்கள் பூரண ஒத்துழைப்பு கொடுக்க தயாராக இருக்கின்றோம்.

அவர்கள் இங்கு வந்தால் விவசாயத்தில் செழிப்பு வரும் என்று குறிப்பிட்டார். (நி-8)

# இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் திட்டத்திற்கு இதுவரை 1893 மில்லியன் ரூபா நிதி உதவி



(கொழும்பு)

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்' (Re building Sri lanka) திட்டத்திற்கு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து இலங்கையர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் 1893 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

சூறாவளியால் சேதமடைந்த வர்த்தகங்கள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான திட்டத்தை தயாரிப்பது குறித்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப் படுத்தல் ஆணைக்குழுவின் தலைமையில் அனைத்து காப்புறுதி நிறுவனங்களின் தலைவர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடலொன்று நடைபெற்றதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அனர்த்த சூழ்நிலையில் சேதமடைந்த வர்த்தகங்கள், சொத்துக்கள் மற்றும் உயிர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின்படி, சொத்துக்களுக்கு ஏற்பட்ட சிறிய சேதங்களுக்கு உடனடி இழப்பீடு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்த பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என்றும், அதுவரை இழப்பீட்டின் ஒரு பகுதி உடனடியாக வழங்கப்படும் என்றும் காப்புறுதி நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்ததாகவும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார். (நி)

## கோட்டா...

சத்தியக் கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்தத் திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட் டது.

பாதுகாப்புக் காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது எனத் தொடர்ச்சியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, கோட்டாபய ராஜபக்ஷ நிகழ்நிலை (online) ஊடாகத் தோன்றி மன்றில் சாட்சியம் அளிக்க தனது சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனையடுத்து கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்தியக் கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட மன்று அடுத்த வழக்கு விசாரணைகளை எதிர் வரும் பெப்ரவரி 06 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ம-7,33)

## தமிழர்...

அதன்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றை, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

16 வருடங்களுக்கு மேலாகப் போராடும் தமக்கு இதுவரை நீதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை என அந்தக் கடிதத்தின் ஊடாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமது உறவுகளை இழந்த தவிப்பில் போராடிக் கொண்டிருந்த சுமார் 500 பேர் எந்தவித நீதியையும் பெறாமலே உயிரிழந்துள்ளதாக, மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இனப்படுகொலைக்கும் சர்வதேச குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கான இலங்கையை சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்துத் தரிப்பிடத்திற்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலும் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை - தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு அருகில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20; இந்திய அணி அபார வெற்றி!

**இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக் கிடையிலான முதலாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.**



போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் ஹர்திக் பாண்டியா அதிகபட்சமாக 59 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்தநிலையில் 176 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 12.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் ஹர்ஸ்தீப் சிங், ஜஸ்பிரிட் பும்ரா, வருண் சக்கரவர்த்தி மற்றும் அக்ஷர் பட்டெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஹர்திக் பாண்டியா தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கமைய 5 போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் இந்தியராக பும்ரா சாதனை




இந்தியா - தென்னாபிரிக்கா முதல் ரி-20 போட்டி ஒடிசாவின் கட்டாக்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் தென்னாபிரிக்காவை 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்த போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் அனைத்து வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பும்ரா பெற்றுள்ளார்.

பும்ரா டெஸ்ட்டில் 234 விக்கெட்டுகள், ஒருநாள் கிரிக்கெட்டில் 149 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள நிலையில் நேற்று முன்தினம் நடந்த ரி-20 போட்டியில் 2 விக்கெட்டுகளை வீழ்த்திய தன் மூலம் ரி-20 கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் டெஸ்ட், ஒரு நாள், ரி-20 ஆகிய 3 வகை கிரிக்கெட்டிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை பும்ரா படைத்துள்ளார். (3)

ஆசிய கிண்ண கிரிக்கெட்

## இலங்கை இளையோர் அணியில் யாழ்.வீரர்கள் இருவர்!



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள 19 வயக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க 15 பேர் கொண்ட அணியை இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு அறிவித்துள்ளது.

இந்த அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன்படி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த குகதாஸ் மாதுளன் மற்றும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ஆகாஷ் இருவருமே அணியில் இணைத்துக் கொள்ளப் பட்டவர்களாவர்.

ஏற்கனவே 19 வயதுக்குட்பட்ட அணியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந் இணைக்கப்பட்டு பின்னர் தேசிய அணியில் இடம்பிடித்திருந்தார்.

அத்துடன் இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக அறிமுகமாகி, யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் பெருமையைக் கொண்டு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா கிரிக்கெட் தகவலின்படி அணி நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்குப் புறப்பட்ட இலங்கை அணி நேபாளம், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் உடன் இணைந்து பி குழுவில் இடம்பெற்றுள்ளது. (3)

## யூட்மெரின் நினைவுக் கிண்ணம் சென்.மேரிஸ் வசம்



வடமராட்சி கிழக்கு நடுவர் சங்கம் நடத்திய அமரர் யூட்மெரின் நினைவுக்கிண்ண காற்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியில் சென். மேரிஸ் அணியை எதிர்த்து வத்திராயன் உதயசூரியன் அணி மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் முடிவில் கட்டைக்காடு சென்மேரிஸ் 2-0 என்னும் கோல் கணக்கில் உதயசூரியனை வீழ்த்தி அமரர் யூட்மெரின் நினைவுக் கிண்ணத்தை கைப்பற்றியது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளையில் மீண்டும் மண்சரிவு
# பாதுகாப்பு தேடி ஓடிய மக்கள்

**(பதுளை)..............................**
**பதுளையில் நேற்று அதிகாலை மீண்டும் மண் சரிவு ஏற்பட்டமையினால் அந்தப் பகுதி மக்கள் பாதுகாப்பு தேடி தப்பிச் சென்று ள்ளனர்.**

எகரிய, மீகொல்ல, மேல் பகுதியிலேயே நேற்று அதிகாலை 4 மணியளவில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள், விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடிய தாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களை வெளியேற்றும் முயற்சிகள் இருந்தபோதிலும், பல குடும்பங்கள் அப்பகுதியில் தங்கியிருப்பதாகவும், பாதுகாப்பு மையங்களை அடைய முடிய வில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்பட்ட போதிலும், அப்பகுதியில் இருந்து எந்த உயிரிழப்பும் ஏற்பட வில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட டித்வா சூறாவளி காரணமாக மலையகம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகள் பாதிக் கப்பட்டுள்ளன. மலையத்தில் அதிகளவான உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய மண்சரிவு காரணமாக மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகின்ற நிலையில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டமையால் அப்பகுதியில் பரபரப்பு நிலவிவருவதாக தெரிவிக்கப் படுகின்றது. (நி)

## பேரிடரைப் பயன்படுத்தி
# அநுர அரசைக் கவிழ்க்க எதிரணி சதி செய்யாது!
## முஜிபுர் ரஹ்மான் எம்.பி



(கொழும்பு)

அனர்த்தப் பேரழிவுச் சம் பவத்தைப் பயன்படுத்தி அநுர அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற் குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சிகளிலும் ஈடுபடாது என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் தெரிவிக்கையில், தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் இந்த நாட்டை ஐந்து வருடங்களுக்கு ஆள வேண்டும். தமது பொறுப்பை நிறைவேற்றாமல் அவர்கள் தப்பிச் செல்ல முடியாது.

நாம் இந்த ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யவில்லை. அதற்கான உத்தரவாதத்தை நாம் வழங்குகின்றோம்.

கடந்த ஒரு வருடமாக நாம் எவ்வித பேரணியையும் நடத்தவில்லை. நாசகார செயலிலும் ஈடுபடவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்திருந்தால் இந்த அனர்த்த நேரம் என்ன நடந்திருக்கும்" என்றும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கேள்வி எழுப்பினார். (நி)



# வீதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கந்தர்மடம் வட மேற்கு இரண்டாம் வட்டாரத்தில் மாநகரசபையின் 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக் கீட்டின் கீழ் புதிதாக அமைக் கப்படும் வீதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் வட்டாரத்தின் மாநகர சபை உறுப்பினர் ப.தர்சான ந்த் தலைமையில்நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாநகர முதல்வர் மதிவதனி விவே கானந்தராசா கலந்து கொண்டு வீதிக்கான அடிக்கல் லினை நாட்டி வைத்தார். (8)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3343


**கதிர்**

இன்னும் பத்து நிமிடத்தில வீட்ல இருக்கனும்...
இல்ல சோத்துக்கு தண்ணி ஊத்திருவேன்....
அஞ்சு நிமிசத்தில அங்க இருப்பேன் டார்லிங்..!




**யுவதேஷ்**

“இடைவேளை வரை படம்எப்படி போகுதுன்னே தெரியலை”
“அடடே, இடைவேளைக்கு அப்புறம்?”
“தியேட்டருக்குள் மீதி இருந்த ரசிகர்கள் எப்படிப் போனாங்கன்னே தெரியல்ல!




**மது**

கடன் வாங்குவதை தவிர்த்து கொள்ளுங்கள்

அது இரவில் கவலையை உண்டாக்கும்

பகலில் தலைகுனிவை ஏற்படுத்தும்.




**வட்சலா**

நவம்பர் நவம்பர் தான்யா; போன வாரம் புயலுக்கு லீவு விட்டாங்க..
இந்த வாரமும் புயல் வருதாம் அப்ப இந்த வாரமும் லீவ் உண்டு...




**மிதுனா**

நீங்க ஏன் அதிகமா யார் கூடவும் பேச மாட்றீங்க...
யார் கூடவும் பேச கூடாது என்னும் மனநிலை உருவாக காரணமே ஒரு காலத்தில எல்லோர் கூடவும் அதிகமா பேசினதுக்கான விளைவு தான் மா....



**சஞ்சனா**

சார் உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு
பேஸ்புக்ல இருக்கீங்களா?
இல்லையே
அப்ப டுவிட்டர், வாட்ஸ் அப்ல
இல்லையே
எங்கதான் இருக்கிறிங்க?
உங்க பக்கத்து வீட்ல தான் 10 வருஷமா இருக்கேன்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினால் உலருணவுப் பொருட்கள் வழங்கல்

(கரணவாய்)

டித்வா புயல் பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லை - புதுக்குடியிருப்பு மக்களுக்கு பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வெள்ள நிவாரண உதவி திட்டத்தில் பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவைச் சங்கத்தினர் மற்றும் ஓடக்கரை சனசமூக நிலையம் இணைந்து செயற்பட்டன.


முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரது வழிகாட்டுதலில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ராஜரத்தினம் விஜயகுமாரின் மேற்பார்வையில் இரணைப்பாலை, மல்லிகைத்தீவு, வள்ளிபுனம், விசுவமடு ஆகிய பகுதிகளில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான 142 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் அடங்கிய அத்தியாவசிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8-60)

# மகளிர் அபிவிருத்தி நிலைய பயிற்சி நெறி-2026

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாக நடாத்தப்படும் நல்லூர் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான மனைப்பொருளியல் டிப்ளோமா தர சான்றிதழ் கற்கைநெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தலுக்கான தொழில் தகைமை முறைமை கற்கை நெறி (NVQ Level-4) 01.01.2026 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் க.பொ.த (சா/த) வரை கல்வி கற்ற நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 18 தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட பெண்கள் எதிர்வரும் 2025.12.26 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவு மற்றும் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் விண்ணப்பங்களைப் பெற்று குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியுமென நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் அறியத்தந்துள்ளார். (8)



சிவகுரு ஆதீனத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 4 ஆம் திகதி தவத்திரு வேலன் சுவாமிகளால் சிவகுரு ஆதீனத்தில் மரநடுகை நிகழ்வு நடைபெற்ற போது...

# சுகாதார குறைபாடுகளுடன் உணவகம்



(மன்னார்)

மன்னார் நகர் பகுதியில் இயங்கி வரும் பிரபல உணவகம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் இயங்கி வரும் குறித்த உணவகம் முன்னதாக பல சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை இடம்பெற்ற போதிலும் மீண்டும் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் சுகாதார அதிகாரிகளால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் அற்றார் அழிபசி தீர்த்தல் செயற்திட்டத்தின்கீழ் டித்வா புயல் ஏற்படுத்திய வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றிருக்கும் குடும்பங்களில் முதல் கட்டமாக 110 குடும்பங்களைத் தெரிவுசெய்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்துள்ளது.


யாழ்.மாவட்டத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களான நாவாந்துறை, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் இருந்து இக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

உலருணவுப் பொதிகள் லக்ஸ்மி பிளாசா மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை அமரர் பொ.பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகள் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருமதி. பராசக்தி பரமேஸ்வரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச்செயலாளர் ம.கஜேந்திரன், உப பொதுச் செயலாளர் சண்.தயாளன் ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (8)

# குறிகட்டுவான் இறங்குதுறை புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் இறங்குதுறை பகுதி புனரமைப்பு பணிகள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 299 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில் கடந்த மாதம் இறுதியில் ஏற்பட்ட பேரிடரில் , குறிகாட்டுவான் இறங்குதுறை மற்றும் அதற்கு செல்லும் பாதை மிக மோசமாக பாதிப்படைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டது.

இதனால் தற்போது, இறங்குதுறைக்கு செல்லும் பாதை அகலமாக்கப்பட்டு, துரித கதியில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# ‘கலைமுகம்’ அமுதமலர் உரையாடல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய "கலைமுகம்" கலை இலக்கிய சமூக இதழின் அமுத மலர் தொடர்பான உரையாடல் அரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

நா.நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அமுத மலரில் வெளிவந்த சிறுகதைகள் பற்றி ரக்ஷானா ஷரிபுத்தீன், சி.விமலன் ஆகியோரும் நேர்காணல், பத்தி பற்றி சி.ரகுராமும் கட்டுரைகள் பற்றி ந.குகபரன், தி.செல்வமனோகரன் ஆகியோரும் கவிதைகள் பற்றி சு.குணேஸ்வரனும் உரையாற்றவுள்ளனர்.

இதன்போது சிறப்புரையை "வாசிப்பு எனும் அசைவியக்கம்-பயிற்சிப் புத்தக பண்பாட்டில் கலை இலக்கிய சஞ்சிகைகள்" என்னும் பொருளில் பா.அகிலன் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கலைமுகம் இதழின் வாசகர்கள், படைப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (8)

# வெள்ளப் பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கு மாநகர முதல்வர் தலைமையில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பேரிடரால் உயிரிழந்த பொது மக்களுக்கு பாதீட்டிற்கான விசேட கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தலைமையில் மாநகர சபை முன்றலில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முதலில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அதிகமான பாதிப்புக்களை எதிர்கொண்ட 22 மாவட்டங்களினதும் உயிரிழந்த பொதுமக்களுக்காக 22 சுட்டிகளில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் மாநகர சபையின் பிரதி முதல்வர், உறுப்பினர்கள், ஆணையாளர், மாநகர சபையின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாயின் உதவியால் மீட்கப்பட்ட 7 உடலங்கள்




(மாத்தளை)

மாத்தளை, பல்லேபொல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பொக்க கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்த நிலையில், அவர்களது உடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த மீட்புப் பணியின் போது, உயிரிழந்த குடும்பத்தின் செல்லப் பிராணியான நாய் ஒன்று, மீட்புப் பணியாளர்களை அதன் உரிமையாளர்கள் புதையுண்ட இடத்திற்கு வழிகாட்டி உதவியதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த செல்லப்பிராணியின் விசுவாசம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன், நெகிழச் செய்துள்ளது.

எவ்வாறாயினும் உயிரிழந்தவர்களின் உடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட இடம் இன்னும் முழுமையாக மண்சரிவுகளால் மூடப்பட்டிருப்பதாகவும் வீட்டின் எச்சங்களைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே குறித்த பகுதியில் தொடரும் அச்சுறுத்தல் காரணமாக சுமார் 80 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், நிலப்பகுதி ஸ்திரமற்றதாக காணப்படுவதால், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விரைந்து முறையான இடர் அறிக்கையை வழங்க வேண்டும் என அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# இலவச மருத்துவ முகாம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு முன்னேற்றக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் இலவச மருத்துவ முகாம் ஒன்று மு/கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலவச மருத்துவ பரிசோதனை, ஆலோசனை மற்றும் இலவச மருந்துகளை பெற்றுக்கொண்டனர்.

பாலகிருஸ்ணன் நவநீதனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த இலவச மருத்துவ முகாமில் வைத்தியர்கள் திஜன், தனஞ்சிகா திஜன், சின்ராசா தர்சிகன் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கான சிகிச்சைகளை வழங்கினர்

இந்த இலவச மருத்துவ முகாமில் முல்லைத்தீவு முன்னேற்றக் கழக நிறுவுனர் சட்டத்தரணி வி.எஸ்.எஸ். தனஞ்சயன், மருந்தாளர்கள், மருத்துவ நிறுவன உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (8-299)

# இலங்கையின் வீதி வலையமைப்பை புதுப்பித்துள்ள கூகுள் மெப்

(கொழும்பு)

நாட்டின் சுமார் 12,000 கிலோமீற்றர் நீளமுள்ள வீதி வலையமைப்பு தொடர்பான தகவல்களை கூகுள் மெப் புதுப்பித்திருப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, A மற்றும் B தரத்திலான பிரதான வீதிகள் தொடர்பான தகவல்களை இணைத்து கூகுள் மெப் அதன் பாதை வரைபடங்களை புதுப்பித்துள்ளது.

வீதி மூடல்கள், பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் போன்ற 6 குறிப்பிட்ட முன்னெச்சரிக்கை தகவல்களுடன் இந்த புதிய பாதை வரைபட அம்சம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இது, பயணங்களை சிறப்பாக திட்டமிடவும் நேரத்தை மீதப்படுத்தவும் எதிர்பாராத போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்கவும் மிகப் பெரும் உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த கூகுள் மெப் நடைமுறைக்கான முன்னோட்டம் இடம்பெறும் என்றும் கூகுள் மெப் செயலியை பார்த்து பாதுகாப்பாக பயணித்தை தொடர முடியும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அவுஸ். துணை அமைச்சர் இலங்கைக்கு விஜயம்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் சர்வதேசக் கல்வி, குடியுரிமை, சுங்கம் மற்றும் பல்வகை கலாச்சார விவகாரங்களுக்கான துணை அமைச்சர் ஜூலியன் ஹில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கடினமான காலகட்டத்தில் ஜூலியன் ஹில்லின் இலங்கை விஜயம், அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவையும் ஆதரவளிப்பையும் வெளிப்படுத்துகிறது. (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 19/3 பாரதி ஒழுங்கை, வட்டாரம் – 07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம்-07, பாரதி ஒழுங்கையிலுள்ள இல 19/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **திருமதி.A.நாகலிங்கம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **கார்த்தி மகாலிங்கம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4373/28.5.2001 ஆம் இலக்க உறுதியால் **நாகலிங்கம் திசவீரசிங்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கணேசலிங்கம் கஜன் பெண் ஜெசிறோஸ்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6230/21.09.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கார்த்தி மகாலிங்கம்** ஆகியவ்ரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த **கார்த்தி மகாலிங்கமும், கணேசலிங்கம் கஜன் பெண் ஜெசிறோஸ்உம்** ஆகியவர்கள் மேற்குறித்த 6230 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் குறித்த கார்த்தி மகாலிங்கம் ஆகியவரால் குறித்த ஆதனத்தில் **தனக்குரித்தான முக்கால் (3/4) பங்கு** குறித்த கணேசலிங்கம் கஜன் பெண் ஜெசிறோஸ்க்கு சீதனமாக அளிக்கப்பட்டிருந்தது எனவும், எனினும் குறித்த உறுதியின் ஆதனடாப்பில் "இதடங்கலில் தனக்குரிய 3/4 பங்கு" எனும் விடயத்தினை குறிப்பிடுவதற்குத் தவறிவிட்டார்கள் எனவும், ஆதலால் குறித்த ஆதனடாப்பில் **"இதடங்கலில் முக்கால் பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்"** என்ற விடயத்தை உட்புகுத்தி திருத்தியமைப்பதாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 6317/16.11.2015 ஆம் இலக்கத்தில் திருத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த **கணேசலிங்கம் கஜனும் பெண் ஜெசிறோஸ்உம், மகாலிங்கம் தயஞ்சனும், மகாலிங்கம் லுசாந்தனும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனத்தை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்ப்பங்கிற்கு சொந்தக்காரர்களாக இருந்து குறித்த ஆதனத்தை நிந்தப்படுத்தாது எல்லையிட்டு ஆட்சிபண்ணி வந்தார்கள் எனவும், சொரியலாக தமது உறுதி இருப்பதுவும் அவ்வாறு சொரியலான உறுதியுடன் ஆட்சி பண்ணுவதும் தமக்கு வசதியீனமாக இருப்பதால் அதை நில அளவையாளர் மூலம் பிரிவிட்டு நிந்தமான துண்டுகளாக்கி ஆட்சி பண்ணி வர தாம் தமக்குள் இணங்கிக்கொண்டோம் என்றும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு கஜேந்தினி நாகேந்திரம் முகதாவில் 716/05.02.2025 ஆம் இலக்கத்தில் பிரிவிடல் உறுதியொன்றை நிறைவேற்றி தத்தமது நிந்தமாக்கப்பட்ட பகுதிகளுக்கு முறையே சொந்தமும், உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| பெயர் | : **"ஆள்வார்தோட்டமும் அமிர்தயன் வளவும்"** |
| இறை | : **சங்கானை கிழக்கு** |
| வீஸ்தீரணம் | : **நில.பர.இலா 00 குளி 16.86** |

எல்லைகள் :

**கிழக்கு** - இராசமலர் பெண் கணேசலிங்கத்திற்குரிய ஆதனமும், ஒழுங்கை முகப்பும்

**வடக்கு** - இராசன் ஜெயகாந்தனுக்குரிய ஆதனம்

**மேற்கு** - குறித்த 716 ஆம் இலக்க உறுதியில் 05 ஆம் அட்டவணையில் விபரிக்கப்படும், 2025.01.19 ஆம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.முரளிதரன் அவர்களால் 0306 ஆம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தில் துண்டு 01 என்று காட்டப்பட்ட மகாலிங்கம் தயஞ்சனும், மகாலிங்கம் லுசாந்தனுக்குமுரிய ஆதனம்.

**தெற்கு** - குறித்த உறுதியில் 06 ஆம் அட்டவணையில் விபரிக்கப்படும் குறித்த படத்தில் துண்டு 03 என்று காட்டப்பட்ட 10 அடி அகலமுள்ள பாதை.

குறித்த **கணேசலிங்கம் கஜனும் பெண் ஜெசிறோஸ்உம்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.


இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கணேசலிங்கம் கஜனும் பெண் ஜெசிறோஸ்உம்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை** (6114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சிறுவர்களுக்கான சமூக ஊடகத் தடையை அமுல்படுத்திய முதல் நாடாக அவுஸ்திரேலியா!



(கன்பெரா)

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான சமூக ஊடகங்களைத் தடை செய்த முதல் நாடாக அவுஸ்திரேலியா நேற்று மாறியது.

இதன் மூலமாக அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்டவர்கள் இப்போது டிக்டொக், எக்ஸ், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூடியூப், ஸ்னாப்சாட் மற்றும் த்ரெட்ஸ் உள்ளிட்ட முக்கிய சமூக ஊடகச் சேவைகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மில்லியன் கணக்கான சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதுடையவர்கள் தங்கள் சமூக ஊடகக் கணக்குகளுக்கான அணுகலை இழந்தனர்.

சமூக ஊடகங்கள் சிறுவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பில் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த தடையை அமுல்படுத்தியுள்ளது.

புதிய சட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கான சமூக ஊடக அணுகலை தடுக்கத் தவறும் தளங்களுக்கு 49.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் வரை அபராதம் விதிக்கப்படும்.

எனினும் இந்தப் புதிய சட்டம் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பேச்சு சுதந்திர ஆதரவாளர்களிடமிருந்து விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

ஆனால் பல பெற்றோர்கள் மற்றும் குழந்தை ஆதரவாளர்களால் வரவேற்கப்பட்டது. (நி)

## சவுதி அரேபியாவை சுழற்றிய சூறாவளி

(ஜெகர்த்தா)

சவுதி அரேபியாவின் மதீனா மாகாணத்தின் யான்பு பகுதியில் கடந்த திங்கட்கிழமை கடும் சூறாவளி ஏற்பட்டுள்ளது.

மதீனா மாகாணத்தின் யான்பு பகுதியில் வீசிய கடுமையான சூறாவளியால் கனமழை பொழிந்துள்ளது.

சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தில் ஆங்காங்கே வீதிகளில் நின்ற வாகனங்கள் சேதமடைந்தன.

அத்துடன் கட்டடங்களும் பலத்த சூறாவளியால் நொருங்கின.

அன்றாடத்தேவைக்காக கடைகள், அலுவலகங்களுக்குச் சென்ற மக்கள் ஆங்காங்கே திணறி ஓடினர்.

சூறாவளியை அடுத்து மீட்பு பணியாளர்கள் களமிறக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யான்பு பகுதியை தொடர்ந்து நப்த் பகுதியிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மேலும் ஜித்தா வரை இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சூறாவளி அனைத்துப் பகுதியையும் புரட்டிப் போட்டதில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சூறாவளி தொடர்பான காட்சிகள் வெளிவந்து மக்களை திணற வைத்துள்ளது. (நி)



## ரஷ்யாவிற்கு நிலத்தை...

## உக்ரைன் ஜன...

(கீவ்) ---

உக்ரைன் அமைதித்தி... பதிலளிக்க ட்ரம்ப் அழுத்தம் கொ... நிலையில், ரஷ்யாவிற்கு... விட்டுக்கொடுக்க முடியாது எ... ஜனாதிபதி ஜெலன்ஸ்கி திட்ட... தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வருவதால், இரண்டு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

அதற்காக, அமெரிக்கா பரிந்துரைக்கும் அமைதி ஒப்பந்தத்தில் ரஷ்யாவுக்கு சாதகமான அம்சங்கள் இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வருகிறார்.

அத்துடன், அமைதித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி ட்ரம்ப், உக்ரைனுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில், ரஷ்யா தங்களிடம், நிலத்தை விட்டுக் கொடுக்குமாறு வலியுறுத்தி வருவதாக உக்ரைன் ஜனா...

திப... விதி... எத... கெ... வி... அ... கள... வு... அ... சர்...

## 7 மாடிக் கட்டடத்தில் தீ... மூச்சுத் திணறி 22 பேர் உ...

### இந்தோனேசியாவில்...



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகர்த்தாவில் உள்ள ஏழு மாடிக் கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு பொலிஸார் தெரி...

வித... 15... பே... செ... கர்... ஜக... பட்... பா... அ... தி... ரு... கா... செ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ளதை விட்டுக்கொடுக்க முடியாது

## ...னாதிபதி திட்டவட்டம்

...த்திட்டத்திற்கு
... கொடுத்துவரும்
...கு நிலத்தை
... என உக்ரைன்
... திட்டவட்டமாகத்



...திபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ஆனால், தாங்கள் எதனையும் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை என்றும் அதற்காகவே தாங்கள் போராடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், உக்ரைனின் சட்டம், அதன் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச சட்டம் எந்தச் சலுகைகளையும் அனுமதிக்காது என்பதால், நிலத்தை விட்டுக் கொடுப்பதற்கு தங்களுக்கு தார்மீக உரிமை இல்லை என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். (நி)

## ...தீப்பரவல்! ...ர் உயிரிழப்பு!

### ...ல் துயரம்

...வித்துள்ளனர்.

இதுவரை, ஆண்களும் மற்றும் 15 பெண்கள் என குறைந்தது 22 பேர் உயிரிழந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் ஒருவர் கர்ப்பிணிப் பெண் என மத்திய ஜகார்த்தா பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் தீக்காயங்களால் பாதிக்கப்படவில்லை என்றும், அவர்கள் பெரும்பாலும் மூச்சுத்திணறல் காரணமாகவே இறந்திருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

உடலங்கள் உடற்கூறு ஆய்வுக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட இந்தக் கட்டடம், சுரங்கம் மற்றும் விவசாயத்துறைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வான்வழி ஆய்வுக்கான ட்ரோன்களை வழங்கும் டெர்ரா ட்ரோன் இந்தோனேசியா என்ற நிறுவனத்தின் அலுவலகமாகும்.

இந்த நிறுவனம் ஜப்பானைத் தளமாகக் கொண்ட டெர்ரா ட்ரோன் கூட்டுத்தாபனத்தின் இந்தோனேசியப் பிரிவு ஆகும்.

தீ அணைக்கப்பட்ட நிலையில், கட்டடத்திற்குள் இன்னும் சிக்கி இருக்கக்கூடியவர்களைத் தேடும் பணி தொடர்கிறது. (நி)



## இலஞ்சம் வாங்கிய அதிகாரிக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றம்



(பீஜிங்)

அரசுக்கு சொந்தமான சொத்து மேலாண்மை நிறுவனத்தின் முன்னாள் மேலாளர், இலஞ்சம் வாங்கிய வழக்கில் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டதாக சீன அரசு அறிவித்துள்ளது.

சீனா ஹுவாரோங் இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸின் முன்னாள் பொது மேலாளர் பாய் தியான்ஹுய் 2014 மற்றும் 2018இற்கு இடையில் பல திட்டங்களை வாங்குவதற்கும் நிதியளிப்பதற்கும் ஆதரவாக அவர் பெரும் அளவில் இலஞ்சம் பெற்றதாகக் கண்டறியப்பட்டது.

அவர் 156 மில்லியன் டொலர்களுக்கு மேல் இலஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது.

இந்த வழக்கில், தியான்ஜினில் உள்ள நீதிமன்றம் இந்த ஆண்டு மே மாதம் அவருக்கு மரண தண்டனை விதித்தது. தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டபோதும் உச்ச நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை பாய் தியான்ஹுய் குடும்ப உறுப்பினர்களை கடைசியாக சந்தித்த பிறகு தூக்கிலிடப்பட்டார். (நி)

## வெள்ளத்தில் மூழ்கியது ஜித்தா



(ஜித்தா)

சவுதி அரேபியாவின் ஜித்தாவில் பெய்துவரும் கனமழையால் நகரம் முழுவதும் வெள்ளப் பெருக்கு மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அவசர சேவைகள் நிலைமையை சமாளிக்க நடவடிக்கை எடுப்பதால், குடியிருப்பாளர்கள் வீட்டிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பல பகுதிகளில் தெருக்களில் தண்ணீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு இந்த நேரத்தில் அரிதான எதிர்பாராத விதமான மழை, அதிகாரிகளிடம் பாதுகாப்பு எச்சரிக்கைகளை தூண்டியுள்ளது.

அநாவசிய பயணங்களைத் தவிர்க்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்தத்தின் மத்தியிலும்
# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தின் மத்தியிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, 2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 21 இலட்சத்து 53 ஆயிரத்து 815 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 485,249 ஆகும்.

மேலும், ஜேர்மனியிலிருந்து 136,081 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 164,013 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 195,565 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 97,261 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 124,298 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 103,307 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்

அத்துடன், டிசம்பர் மாதத்தின் முதல் எட்டு நாட்களில் 50,222 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ந)

# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991 - இந்து
நட்சத்திரம்: பூரம்
4இல்சூரிசெவ்
கி-பா- 15
உயரம்: 6"
தகைமை/தொழில்: A/L,Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16299

பிறப்பு:1993 - இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா- 38 1/2
உயரம்:6"
தகைமை/தொழில்- O/L, Security Guard(Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16300

பிறப்பு:1987 - இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
7இல்செவ்
கி-பா-32
உயரம்:5'6"
தகைமை/தொழில்-BSC,MSC, Engineer (Singapore )
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். சைவபோசனம்
தொ.இ: B/10594

பிறப்பு: 1996 - இந்து
நட்சத்திரம்:பூராடம்
கி-பா- 36 1/2
12இல்சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-BSc, MSC, Engineer (London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15294

பிறப்பு: 1994 - இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-16
உயரம்:6"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: B/16298

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்-மிருகசீரிடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA,pvt
எதிர்பார்ப்பு:வெளிநாடு. அரசதொழில். விவாகரத்தானவர்
தொ.இ: G/14366

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்-சதயம்
7இல்சூரிசெவ்
கி-பா- 95
உயரம்: 5'
தகைமை/தொழில்: MLT
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15462

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்-ரேவதி
கி.பா -06
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BSc, MSc, Engineer(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15463

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
8இல்செவ்
கி.பா - 94
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BSc, Senior Opreation Analyst
எதிர்பார்ப்பு: Only London(PR)
தொ.இ: G/15466

பிறப்பு: 1984 - இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கிபா-71
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு - Degree & Employee
தொ.இ: G/16189

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

## இன்று ஒரு தகவல் 497



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# போலி டாக்டர்கள்

ஒரு விவசாயி, புளிய மரத்தின் மேலே ஏறி இருக்கிறார். கால் வழுக்கி விட்டது. கிளையிலே இருந்து கீழே விழுந்து விட்டார். பலமான அடி, வலது காலிலே முழங்காலுக்குக் கீழே இரண்டு எலும்பு முறிந்து போனது! தொடை எலும்பும் முறிந்து போனது!

அவருக்கு வேண்டிய சொந்தக்காரர் ஒருவர் பார்த்தார். உடனே அவரை ஒரு காரிலே ஏற்றி நகரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்தார்.

ஆனால் அதற்குள்ளே அந்தக் காரை ஓட்டிக்கொண்டு வந்தவர் சொன்னார். "ஐயா பெரிய வைத்தியசாலைக்கு எல்லாம் கொண்டு போனால் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லுவார்கள், செலவும் எக்கச்சக்கமாக ஆகிவிடும். பக்கத்து ஊரிலே எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் போனால் ஆபரேஷன் எதுவும் இல்லாமலேயே இதைக் குணப்படுத்தி விடுவார்" என்றார்.

"சரி அங்கேயே போவோம்" என்று சொல்லிப் போனார்கள்! அவர் காலை பார்த்திருக்கிறார். உடனே அதிலே என்னமோ ஒரு எண்ணெயைத் தடவி இறுக்கமாகக் கட்டுப் போட்டுவிட்டு போய்விட்டு வா சரியாகி போய் விடும் என்று சொல்லியிருக்கிறார்.

இவர்கள் வீட்டுக்கு வந்துவிட்டார்கள் வந்த இரண்டு நாளிலே கால் வீங்கிப் போனது - கடுமையான வலி! பக்கத்திலே யாரோ ஒரு டாக்டரிடம் போய் விடயத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அவர் ஒரு தூக்க மாத்திரையை எடுத்துக் கொடுத்திருக்கிறார். இதைச் சாப்பிட்டு விட்டு தூங்கு. வலி தெரியாது என்று சொல்லி இருக்கிறார்.

அதன்பின் நிலைமை சீரியஸ் ஆகி போய் ஒரு கட்டத்திலே மயங்கி விழுந்து விட்டார். அவரை எல்லோரும் அவசரம் அவசரமாக தூக்கிக் கொண்டு பெரிய வைத்தியசாலைக்கு போய் இருக்கிறார்கள்.

அங்கே, எக்ஸ்ரே எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். அப்போதுதான் அந்த விபரீதம் புரிந்தது. முழங்காலுக்குக் கீழே உள்ள பகுதியிலே இறுக்கமாக கட்டுப் போட்டதினாலே அந்தப் பகுதி அழுகிப் போய் "கேஸ்-காங்க்ரீன்" என்ற நோய் உண்டாகி இருக்கிறது என்று தெரிய வந்தது.

உடனடியாக அறுவை சிகிச்சை செய்து முழங்காலுக்கு மேலே வரை அழுகிய பகுதியை வெட்டி எடுத்து அப்புறப்படுத்தி இருக்கிறார்கள். ஆறு போத்தல் இரத்தம் வேறு கொடுத்திருக்கிறார்கள். வேறு வழியே இல்லை. இப்போது அந்த விவசாயி செயற்கைக் கால் பொருத்திக்கொண்டு நடந்து போய் வந்து கொண்டிருக்கிறாராம். தமிழ்நாட்டிலே ஒரு கிராமத்திலே உண்மையாகவே நடந்த கதை இது. இதற்கு என்ன காரணம்?

போலி டாக்டர்கள் பெருகிப் போனதுதான் காரணம். கருச்சிதைவு செய்வது (அபார்ஷன்), எலும்பு முறிவு சிகிச்சை இதுமாதிரி விடயங்களுக்குத்தான் போலி டாக்டர்கள் அதிகம். மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது மாதிரி ஆகிவிடும். எலும்பு முறிவுக்கு வைத்தியம் செய்கிறேன் வாருங்கள் என்று நிறையப் பேர் போர்டு மாட்டி இருப்பார்கள்.

உள்ளே போனால் எக்ஸ்ரே பார்க்க மாட்டார்கள். எடுத்துப் பார்த்தால் தானே - நிஜமாகவே எலும்பு முறிந்திருக்கின்றதா? இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்க முடியும்! எக்ஸ்ரே பார்க்காமல் இரத்தக்கட்டு, சதை பிசகி இருக்கிறது. மூட்டு விலகி இருக்கிறது. இதையெல்லாம் கூட எலும்பு முறிவு என்று நினைத்துக்கொண்டு எண்ணெய், முட்டைக்கரு, சுண்ணாம்பு இதையெல்லாம் போட்டு இறுக்கமாகக் கட்டுப் போட்டு விட்டு விடுவார்கள். கடைசியிலே என்ன ஆகும் தெரியுமா?

இரத்தம் ஓட்டம் தடைப்படும். சிறுநீரகம் சேதமடையும். ரொம்ப ஆபத்தான விடயம் பல பேருக்கு எலும்பு மூட்டுகள் செயற்படாமல் மயோசைட்டிஸ் ஆசிபிகான்ஸ் (Myositis - Ossificans) என்கிற நோய் உண்டாகிவிடும். இதைக் குணப்படுத்த முடியாது அறுவை சிகிச்சைதான் செய்ய வேண்டி இருக்கும்.

சாதாரண எலும்பு முறிவை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து மாவு போட்டு (பிளாஸ்டர் ஆப் பாரிஸ்) ரொம்ப சுலபமாக குணப்படுத்துவதை விட்டு விட்டு இவ்வளவு அவஸ்தையும் தேவையா?

நிஜ டாக்டர் என்று சொல்பவர்கள் நோயைக் குணப்படுத்துவார்கள் போலி டாக்டர் என்கிறவர்கள் நோயை உண்டாக்குபவர்கள். இதுமாதிரி ஆசாமிகளிடம் இருந்து நாம்தான் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒரு வைத்தியசாலை! அங்கே ஒரு பெரிய ஆபரேஷன் நடந்து முடிந்தது. மேஜர் ஆபரேஷன் " ஆபரேஷன் சக்ஸஸ்!" என்று சொல்லிவிட்டு அழ ஆரம்பித்து விட்டார். அந்த டாக்டர் "ஆபரேஷன் வெற்றி" என்று சொல்லிவிட்டு அழுகிறீர்களே என்று கேட்டு இருக்கிறார் நோயாளி!

"இது அழுகை இல்லைப்பா, ஆனந்தக் கண்ணீர்!" என்றாராம் டாக்டர்.

"என்ன சொல்கிறீர்கள்? எதற்கு ஆனந்தக் கண்ணீர்!" என்று கேட்டிருக்கிறார் அந்த பேஷண்ட்.

"பின்னே என்னப்பா எட்டாங் கிளாஸ் படித்த நானே இவ்வளவு பெரிய ஆபரேஷனை செய்து விட்டேன், அது எப்பேற்பட்ட விடயம்!" என்று சொல்லிக்கொண்டே கன்னத்தைத் துடைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் பொலிஸாரால் நிவாரணப் பொருட்கள் வழங்கல்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 50 குடும்பங்களுக்கு தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திசாநாயக்கவின் ஒழுங்குபடுத்தலில் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேன கலந்து கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தார். (8-316)

# நினைவிட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஊடகவியலாளர்களுக்கான நினை விட திறப்பு நிகழ்வானது எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி நீச்ஷா ஒருங்கிணைந்த பண்ணையில் இடம்பெறவுள்ளது. (3)

# வவுனியாவில் 79 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில்

(வவுனியா)


வவுனியாவில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பினால் 79 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் தொடர்ச்சியாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக வவுனியா மாவட்டத்திலும் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 58 இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது மழைவீழ்ச்சி குறைவடைந்த நிலையில் முகாம்களில் இருந்த மக்கள் மீண்டும் தமது வீடுகளிற்கு திரும்பியிருந்தனர்.

இருப்பினும் கடுமையான பாதிப்புக்களை சந்தித்த வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 3 இடைத் தங்கல் முகாம்கள் தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதுடன் அங்கு 79 குடும்பங்களை சேர்ந்த 232 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (8-250)



மன்னார் வெள்ளாங்குளம் மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவு பணிகளை முன்னெடுத்துள்ளனர். (படம் யதுபாஸ்கரன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 800 | 700 | 400-700 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 175 | 250 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 700 | 400-500 | 400 | 500 |
| தக்காளி | 300 | 300 | 400 | 180-250 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 120-150 | 150 | 200 |
| கோவா | 250 | 250 | 300 | 200 | 400 | 200 |
| கரட் | 400 | 350 | 400 | 400 | 400 | 320 |
| பூசணி | 120 | 160 | 150 | 100-120 | 150 | 80 |
| புடோல் | 300 | 400 | 300 | 400 | 400 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 40-60 | 200 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-350 | 300 | 200-350 | 400 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 200 | 300 | 250 |
| பாகற்காய் | 1200 | 1300 | 1600 | 1000 | 2000 | 1500 |
| வெண்டக்காய் | 300 | 300 | 300 | 250 | 500 | 300 |
| கருணைக்கிழங்கு | 300 | 320 | 300 | 250 | 300 | -- |
| பயற்றங்காய் | 1200 | 700-1100 | 1000 | 800-1000 | 1200 | 1100 |
| லீக்ஸ் | 400 | 350 | 350 | 300 | 400 | 320 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 900 | 900 | 1000 | 800 | 1000 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | -- | 1600 | -- |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 900 | 1200 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 600 | -- | 400 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 200 | 150 | 200 | -- |
| தேசிக்காய் | 1000 | 1200 | 400 | 300-500 | 400 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 70-150 | 120-160 | -- |
| இராசவள்ளி | 600 | 900 | 600 | 400 | 600 | -- |
| வெங்காயப்பூ | 450 | 800 | 1000 | -- | -- | -- |
| முள்ளங்கி | 400 | 350 | 200 | 70 | 400 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 150 | -- | 80 | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | 70 | 80 | -- |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 120 | 150 | -- |

# இராசிபலன்

11.12.2025
கார்த்திகை 25, வியாழக்கிழமை
சப்தமி முன்னிரவு 7.47 மணி வரை

மகம் முற்பகல் 8.43 மணிவரை
சுப நேரம் 7.49-9.19 மணிவரை
இராகுகாலம் 1.49-3.19 மணிவரை

சந்திராஷ்டமம்- திருவோணம்.

வளவன்

**மேஷம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்,பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமை கூடும், பொறுப்புக்களும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல்கள்அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள், ரோக பயமுண்டு.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலை தூரப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**தனுசு** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

அஞ்சாதவனும் ஆசைப்படாதவனும் உண்மையான உயர்ந்த மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் பாகம் 4 930





தங்கள் வாயால் அப்படியொன்றும் சபதம் கூற வேண்டாம்!" என்று பரபரப்புடன் சொன்னார்.

"ஏன்? அவள் பேரில் என்ன தங்களுக்கு அவ்வளவு இரக்கம்? என்னை அவ்வளவு தூரம் வேதனைப்படுத்தியவளை என்ன செய்தால்தான் என்ன?" என்று சுந்தர சோழர் பொங்கினார்.

"எவ்வளவு கஷ்டப்படுத்தியிருந்தாலும், கஷ்டப்படுத்தியவர் நெருங்கிய பந்துவாயிருக்கும் பட்சத்தில் ஒருவேளை சொந்தப் புதல்வியாயிருக்கும் பட்சத்தில்" என்று முதன்மந்திரி கூறித் தயங்கி நின்றார்.

"முதன்மந்திரி! இது என்ன பிதற்றல்?" என்றார் சுந்தர சோழர்.

"சக்கரவர்த்தி! தங்களுடைய பொறுமையை உண்மையில் சோதித்துவிட்டேன். அதற்காக எனக்கு உசிதமான தண்டனையைக் கொடுங்கள். ஆனால் நந்தினிதேவியைத் தண்டிப்பது பற்றிப் பேச வேண்டாம். நந்தினிதேவி தனாதிகாரி பழுவேட்டரையரின் இளைய ராணி மட்டும் அல்ல மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. அவரை எந்தக் குற்றத்துக்காக யார்தான் தண்டிக்க முடியும்?" என்றார் அநிருத்தப்பிரம்மராயர்.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி சிறிது நேரம் முதன்மந்திரியை அளவில்லாத வியப்போடு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு 'கலீர்' என்று சிரித்தார்.

"சக்கரவர்த்தி! இன்றைக்கு மிகவும் ஸுபதினம். இரண்டு தடவை தாங்கள் சிரிக்கக் கேட்டேன்" என்றார் அநிருத்தர்.

"பிரம்மராயரே! இந்த அரண்மனையில் இப்போது ஒரு பெண் பைத்தியந்தான் இருக்கிறது என்று நினைத்தேன். நீர் அவளை விடப் பெரிய பைத்தியம் என்று இப்போது அறிந்தேன். அவள் பேசாத ஊமைப் பைத்தியம் நீர் பேசிப் பிதற்றும் பைத்தியம்!" என்று கூறிவிட்டுச் சுந்தரசோழர் மறுபடியும் நினைத்து நினைத்துச் சிரித்தார்.


### அத்தியாயம் 36
### பின்னிரவில்

சுந்தர சோழரின் சிரிப்பு ஒலி கேட்டுக் கொண்டிருக்கும் போதே பெண்மணிகள் அங்கு வந்தார்கள். முன்னால் மகாராணியும் அவளுக்குப் பின்னால் குந்தவை ஒரு பக்கமும் வானதி ஒரு பக்கமும் பிடித்து இழுத்துக் கொண்டு வர மந்தாகினியும், அவர்களுக்கும் பின்னால் பூங்குழலியும் ஒரு தாதிப் பெண்ணுமாக ஊர்வலம் போல வந்தார்கள். சுந்தர சோழரின் சிரிப்பு அவர்களுக்கும் சிறிது குதூகலத்தை உண்டு பண்ணியிருந்தது. மந்தாகினி அவரை ஒரு கணம் நிமிர்ந்து பார்ப்பதும் மறுகணம் குனிந்து தரையைப் பார்ப்பதுமாயிருந்தாள். அவளுடைய அலங்காரம் இப்போது பூரணம் அடைந்திருந்தது. குந்தவைப்பிராட்டி அலங்காரக் கலையில் இணையில்லாத தேர்ச்சி பெற்றவள் என்று அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தாள். அதற்காகவே சிற்றரசர்கள் தங்கள் மகளிரை இளையபிராட்டியின் தோழியாயிருப்பதற்கு பழையாறைக்கு அனுப்புவது வழக்கம். தொடரும்...

# சிறுவர் அரங்கம்



## உயிர் இனங்களுக்குள் உதவி



மரத்தின் மீது இருந்த காக்கை, அதைப் பார்த்ததும் உடனே ஆமையையும் எலியையும் கூட்டிக் கொண்டு போய் மானை விடுவித்தது.

அந்தச் சமயம் வேடன் வந்தான். எலியும், மானும், காகமும் வேடனிடம் அகப்படாமல், தப்பி ஓடிவிட்டன.

ஆனால், ஆமையால் வேகமாக ஓட இயலாததால், வேடன் அதைப் பிடித்து கூடையில் போட்டு விட்டு, உணவு அருந்தச் சென்றான்.

ஆமை அகப்பட்டுக் கொண்டதை நினைத்து எலி, காகம், மான் மூன்றும் வருந்தின.

மானுக்கு ஒரு யோசனை தோன்றியது. அப்படியே செய்யலாம் என எலியும் காகமும் தீர்மானித்தன.

மான் செத்துப் போனது போல், படுத்துக் கொண்டது, அதன்மீது காக்கை அமர்ந்து தன் கண்ணைக் கொத்துவது போல் பாசாங்கு செய்தது.

மான் செத்துக் கிடப்பதாக வேடன் நினைத்து ஆமையிருந்த கூடையை அப்படியே போட்டு விட்டு, மான் கிடந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இதுவே நல்ல சமயம் என்று நினைத்த ஆமை, அருகில் இருந்த நதிக்குள் குதித்து மறைந்தது.

ஆமை தப்பியதைக் கண்ட மான், விர்ரென்று பாய்ந்து ஓடிவிட்டது.

காக்கை பறந்து மரத்தின்மீது அமர்ந்தது. எலி தூரத்தில் நின்று பார்த்து மகிழ்ந்தது.

ஆமையும், மானும் ஏமாற்றியதை எண்ணி வேடன் வருத்தத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

பிறகு, அந்த ஜீவன்களும் ஒன்றுக்கொன்று உதவியாக இருந்து வாழ்ந்தன.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும், அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்கிறது.
-அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## நாமே நமக்குப் பகை நாமே நமக்குத் துன்பம்

விடுதலைப் புலிகள் பற்றியும் தலைவர் பிரபாகரன் பற்றியும் உயர்வாகப் பேசக்கூடிய தகைமை மாவீரர்களின் பெற்றோர்களுக்கும் முன்னாள் போராளிகளுக்குமே உண்டு.

ஏனெனில் தலைவர் பிரபாகரன் முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்துக்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்தவர்கள் அவர்கள்.

ஏனைய நாம் பங்காளிகளாகவன்றி, பார்வையாளர்களாகவே இருந்தோம்.

எனினும் மாவீரர் குடும்பங்களும் முன்னாள் போராளிகளும் மௌனமாக இருக்கிறார்கள்.

ஆம், 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்கு பின்னர் மாவீரர்களின் குடும்பங்களும் முன்னாள் போராளிகளின் குடும்பங்களும் பட்ட அவஸ்தைகள் கொஞ்சமல்ல.

இங்கு நாம் கூறுகின்ற அவஸ்தை படைத்தரப்பால் ஏற்பட்டது மட்டுமல்ல. மாறாக நம்மவர்களும் அவர்களைப் புறந்தள்ளுவதுபோல நடந்து கொண்டனர்.

குறிப்பாக முன்னாள் போராளிகள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகக் கடும் கஷ்டங்களை எதிர்கொண்டனர்.

வேலை தேடுவதில் கூட அவர்கள் துன்பப்பட்டனர்.

அதன் விளைவாக அவர்கள் மௌனமாகி விட, சுயலாப நோக்குடையவர்கள் விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் உச்சரிப்பதன் மூலம் தங்களை தமிழீழப் பற்றாளர்கள் போல காட்ட முற்பட்டுள்ளனர்.

உண்மையில் விடுதலைப் புலிகளை – தலைவர் பிரபாகரனை உச்சாடனம் செய்கின்றவர்களில் கணிசமானவர்கள் ஆசாடபூதிகளாக இருக்கின்றனர் என்ற உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் ஆத்மார்த்தமாகப் புலிகளையும் தலைவரையும் நேசிக்கின்ற நேர்மையாளர்களும் உளர்.

இதுதவிர, தமிழ் மக்கள் மீது தாம் கருசனை கொண்டவர்கள் போல காட்டிக் கொள்வதாக இருந்தால், அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை எதிர்ப்பது கட்டாயம் என்ற நினைப்பில் செயற்படுகின்றவர்களும் நம் மத்தியில் உள்ளனர்.

இவையெல்லாவற்றுக்கும் காரணம் நம் மக்களிடம் இருக்கக்கூடிய அக்கறையீனம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. இந்த நாட்டைப் பொறுத்தவரை ஒப்பீட்டு அளவிலேயே ஆட்சியாளர்களை நாம் வகைப்படுத்த முடியும்.

அந்தவகையில், கடந்த கால ஆட்சியாளர்களுடன் ஒப்பிடும்போது, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சி சிறப்பானது என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

இதை நாம் கூறுவதற்காக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை நடந்ததா? காணி விடுவிப்பு முடிந்ததா? பௌத்த ஆக்கிரமிப்பு தணிந்ததா? என்றெல்லாம் இவ்விடத்தில் கேட்பது பொருத்தமற்றது.

மாறாக, இனவாதமற்ற அரசியல் கட்டமைப்பை நோக்கிய பயணம் ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் முளைவிட்டுள்ளது.

அந்த முகிழ்ப்பை வளர்த்தெடுப்பதில் எங்களின் பங்களிப்பும் இருந்தாக வேண்டும்.

அதை நாம் செய்யத் தவறுவோமாயின் சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்ற தமிழின விரோதிகளே அரியணை ஏறுவர்.

ஆக, எமக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமேயன்றி நமக்கு நாமே பகையாகவும் நமக்கு நாமே துன்பமாகவும் இருப்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

## வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட நேரம் தாருங்கள்

### வடக்கு ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்குக் கடிதம்

இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி நடவடிக்கைகளால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பாதிப்புக்கள் தொடர்பாகவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடுவது குறித்தும் ஜனாதிபதி மனு வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆளுநர் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை (10) சந்தித்து இக்கோரிக்கைக் கடிதத்தைக் கையளித்தனர்.

பல்வேறு இடர்பாடுகளின் போதும் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வருகின்ற உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி முறையால் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல்வளம் என்பன எவ்வகையில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன என்பது குறித்தும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குத் தமக்குச் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் அந்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தால் கையளிக்கப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட ஆளுநர் அதனை உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். (ம-7)

## கரைச்சி பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

கரைச்சி பிரதேச சபையின் 2026ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 22 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் 2026ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அமர்வு தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தவிசாளரால் 2026ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். பின்னர் வரவு செலவுத் திட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றுமாறு கோரப்பட்ட போது, தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இதையடுத்து பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பெரும்பாலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்புக்கு விருப்பம் தெரிவித்திருந்தனர்.

தொடர்ந்து உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தனர். அதேவேளை வரவு செலவுத் திட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதாகவும் இதற்கு ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்குமாறும் கேட்டிருந்தார். தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சேபனை தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தது.

இதனையடுத்து 22 மேலதிக வாக்குகளால் 2026ம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது. (ம-7,316)

## மண்சரிவில் புதையுண்ட மகளை வெளியே எடுத்துத் தாருங்கள்

### கண்ணீருடன் தாயார் கோரிக்கை

(பதுளை)

பதுளை, கந்தக்கெட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகொல்ல கிராமத்தில் கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற பாரிய மண்சரிவில் காணாமல் போன தனது ஒரே மகளை தாய் தேடி வரும் துயரச் சம்பவம் பதிவாகியுள்ளது.

21 வயதான காயத்ரி காவிந்தி ராஜபக்ஷ என்ற யுவதி மண் சரிவில் சிக்கி 11 நாட்களாகியும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

அந்தக் கிராமத்தில் மண் சரிவில் சிக்கி மொத்தம் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். காணாமல் போன யுவதியின் உறவினர்கள் மூவரும் இதில் அடங்குவர்.

அதன்படி யுவதியின் பாட்டனார் மற்றும் பாட்டி ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

மண்சரிவில் இருந்து தப்பியோடும் போது மகள் அதில் சிக்கிக் கொண்டதாகத் தாய் தெரிவித்துள்ளார்.

தனது மகள் இந்த மண்மேட்டிற்குள் இரண்டடி அல்லது மூன்றடி ஆழத்தில் எங்கோ இருக்கிறார் என உறுதியாக நம்புவதாகவும்,

நான் ஒரு நாளைக்கு இருபது முப்பது தடவை இங்கே வந்து தேடுகிறேன். தயவுசெய்து யாராவது வந்து என் மகளை வெளியே எடுத்துத் தாருங்கள் எனத் தாய் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகளின் கையைப் பிடித்துக்கொண்டு ஓட முயற்சித்த போது மகள் தோட்டப் பக்கம் பாய்ந்ததாகவும், மகள் கை நழுவியதாகவும் இருவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தாய் தெரிவித்தார்.

அவரது மகன் அருகில் உள்ள வயலில் இருந்து ஓடிவந்து என்னைக் காப்பாற்றியதாகவும் தெரிவித்தார்.

எனினும் மகளைக் காப்பாற்ற முடியவில்லை. மகள் மிகத் திறமையானவர் எனவும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லவிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## ஏழாலை மயிலங்காட்டில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கிழக்கு மயிலங்காட்டில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.


இதில் கிளிநொச்சி, கோணாவில் வீதி யூனியன் குளத்தைச் சேர்ந்த சுதாகரன் கார்கிலன் (வயது - 20) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

ஏழாலையில் குடும்பம் ஒன்றுடன் வசித்து வந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணை மேற்கொண்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கவிஞரும் உஷா வெதுப்பக ஸ்தாபகரும்

ஆகிய பொலிகை

# அமரர் செ.யோகராஜா

(1792)

உஷா பேக்கரி,
பொலிகண்டி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டிப்பர்...

யாறுப் பகுதியில் மணலுடன் வந்த டிப்பர் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் திருவையாறுப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய செல்வரத்தினம் சோபனாத் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டிற்கு முன்னால் உள்ள வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மேல் அமர்ந்திருந்த வரை டிப்பர் பின்புறமாக மோதித் தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,315,316)


மஹஜன சம்பத
திகதி 2025.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 6039
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
H 4 5 1 6 6 1
அத சம்பத
H 1 6 6 1
சீட்டிழுப்பு இலக்கம் 0614
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 155
சிங்கம் 21 31 39

தன நிதானய
திகதி - 2025.12.10
சீட்டிழுப்பு இலக்கம் - 2069
E 36 40 45 75 E
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 10/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2387
Q 04 24 28 38 49

ஜய JAYA
திகதி 2025.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 0307
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 5 0 4 9

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4281
சீட்டிழுப்பு திகதி 10.12.2025
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Y 09 22 29 71
Y
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 1348
கடகம் 13 24 49 57 கடகம்


## யாழில்...

ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்க மறுத்த கிராம சேவையாளருக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லுண்டாய்ப் பகுதியில் உள்ள புதிய வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் 16 வயதான மாணவனே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

தந்தை இல்லாத நிலையில், தாயுடன் கல்லுண்டாய் புதிய வீட்டுத் திட்ட வீட்டில் வசித்து வந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் குறித்த மாணவனின் தாய் வேலை நிமிர்த்தமாக கொழும்பில் தங்கியுள்ளார்.

நான் தனியே அந்த வீட்டில் இரவு நேரங்களில் தங்க முடியாததால், குருநகர்ப் பகுதியில் உள்ள பெரியம்மா வீட்டில் தங்குவேன்.

இந்த நிலையில் மழை ஆரம்பித்தால் எமது வீடு வெள்ளத்தில் மூழ்குவது வழமையானது. அதனால் மழை ஆரம்பித்ததால், நான் தொடர்ச்சியாக பெரியம்மா வீட்டில் தங்கியிருந்தேன். எமது வீட்டினுள் வெள்ளம் சென்றிருந்தது.

இந்த நிலையில் பேரிடரால் எமது வீடு வெள்ளத்தில் மூழ்கியதால் அரசாங்கத்தால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்காக எமது பகுதி கிராம சேவையாளரிடம் பதிவுகளை மேற்கொள்ளச் சென்ற வேளை அவர் எமது பதிவுகளை ஏற்கவில்லை.

வெள்ளம் ஏற்படும்போது, வீட்டில் எவரும் வசிக்கவில்லை எனக் கூறி எமது பதிவை பதிய மறுத்துள்ளார். ஆனால் எமது அயலவர்கள் சிலரும் வெள்ளம் வருவதற்கு சில நாட்களுக்கு முன்னரே அங்கிருந்து வெளியேறி உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தனர். அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. எமது குடும்பத்தை மாத்திரமே கிராம சேவையாளர் திட்டமிட்டுப் புறக்கணித்துள்ளார்.

இது தொடர்பில் அம்மா மேலதிகாரிகளுடன் கதைத்த போதிலும், வீட்டில் வசிக்கவில்லை எனக் கூறி நிதியுதவி தரவில்லை.

எமக்கு அந்த நிதியுதவியைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன் என மாணவன் மேலும் தெரிவித்தான். (ம-7,33)

## கடலில் தவறி...

இறங்குதுறையில் படகுகள் கட்டியிருந்த கயிற்றில் தடக்கி, கடலினுள் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நெடுந்தீவு 15ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிரேம்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

நெடுந்தீவு இறங்குதுறையில் இருந்து நேற்று புதன்கிழமை காலை குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட இருந்த படகில் ஏறச் சென்ற வேளை, இறங்குதுறையில் படகுகள் கட்டி இருந்த கயிற்றில் தடக்கியதில் தடுமாறி கடலினுள் விழுந்து நீரில் மூழ்கிக் காணாமல் போனார்.

உடனடியாக கடற்படை சுழியோடி வீரர்கள் கடலில் குதித்து, தேடிய நிலையில், நீண்ட நேர தேடலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,33)

## யாழ்ப்பாணத்தில்...

பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

டித்வா சூறாவளி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலாளரினால் விடுக்கப்பட்ட அறிக்கையின்படி நெடுந்தீவில் 1216 வீடுகள் சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் 2025ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு தரவுகளின் பிரகாரம் நெடுந்தீவில் 893 வீடுகள் மாத்திரமே உள்ளன.

எனவே அந்த எண்ணிக்கை நவம்பர் மாதத்தில் 1216 ஆக அதிகரித்தது எவ்வாறு? என்ற பாரிய சந்தேகம் எழுகிறது.

ஆனால் மக்கள் தொகை குறைவாகக் காணப்படும் நெடுந்தீவில் இவ்வாறு அதிகரித்தமைக்குக் காரணம் என்ன?

இந்த விடயம் தொடர்பாக மாவட்டச் செயலாளர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

மக்கள் நிதியைக் கொள்ளையிடும் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகம் எழுகிறது.

எனவே இது ஒரு மோசடிச் செயல் எனத் தற்போது அம்பலமாகியுள்ளது. இந்த ஊழலை கண்டுபிடித்துள்ளோம்.

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

## உதவி...

அவற்றினை அனைவரும் பார்வையிட முடியும். அவ்வாறு பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட எவரேனும் ஒருவரின் பெயர் இணைக்கப்படாது இருந்தால் அல்லது தவறான வழியில் எவரேனும் ஒருவரின் பெயர் இணைக்கப்பட்டு இருந்தால், ஆதாரங்களுடன் அவை தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர், யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ். கபிலன் அறிவித்துள்ளார்.

பேரிடரில் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி உதவியில் மோசடிகள் ஏதேனும் நடைபெற்று இருந்தால் அது தொடர்பில் உடனடியாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் 30ஆம் இலக்க அறையில் இயங்கும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்திற்கு அறிவிக்குமாறு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## நிவாரண...

விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

35 மெற்றிக் தொன் எடையுள்ள இந்த உதவிப் பொதிகளுக்குள் நடமாடும் மின் உற்பத்தி இயந்திரம், சமையல் எண்ணெய், சீனி, அரிசி மற்றும் கூடாரங்கள் என்பன உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலுஷியன் ஐ.எல் - 76 ரக பாரிய சரக்கு விமானம் மூலமே இந்த உதவிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. (ம-7)


உத்தியோகபூர்வ முடிவுகள்
10.12.2025 சீட்டிழுப்பு வாரம் 0747
ஆங்கில எழுத்து C மற்றும் வெற்றி இலக்கம் 0 1 8 9 0 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,189,495.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3013
சீட்டிழுப்பு திகதி 2025.12.10 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 35 38 42 55 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,400,758.40

சனிதா
திகதி 10.12.2025 வெற்றி வாரம் 5174
13 19 47 73 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,726,433.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 843
சீட்டிழுப்பு திகதி 10.12.2025 புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 27 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4725
சீட்டிழுப்பு திகதி 10.12.2025 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 25 51 61 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,592,990.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 18 02 56 69 70
சீட்டிழுப்பு வாரம் 2189
10.12.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.612,079,368.40
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2839
சீட்டிழுப்பு திகதி : 2025.12.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,801,483.20
34 57 64 69 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பிரபல விருந்தினர் விடுதிக்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

- சமையலாளர் - ஆண், பெண் (cook)
- விருந்தினர் வரவேற்பு அதிகாரி (Guest Relation officer) (ஆண்) (ஆங்கில மொழி பேசத் தெரிந்தவர்)
- வரவேற்பாளர் Receptionist (பெண்)

உணவு, பிற சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**077 935 2234**

(6122)

## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள கோவில் ஒன்றிற்கு துப்பரவுத் தொழிலாளர் தேவை.

வயது : 25 – 50

**075 759 9546**

(6072)


## திரிபோஷ நிறுவனம் ரூ.100 மில்லியன் உதவி

(கொழும்பு)

லங்கா திரிபோஷ நிறுவனம் 100 மில்லியன் ரூபா நிதியை நேற்று (10) திறைசேரிக்கு வழங்கியுள்ளது.

திரிபோஷ நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க உள்ளிட்ட குழுவினர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னான்டோவிடம் இதற்கான காசோலையைக் கையளித்தனர்.

இந்நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவும் கலந்து கொண்டார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4542)

**076 825 7716** (ஆகாஸ்)

## Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-4492)

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ். நகரப் பகுதியிலும், யாழ் நகரத்தை அண்டிய பகுதியிலும் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :

**074 154 9551**

(6123)

## அர்ச்சகர் தேவை

யாழ். நல்லூரிற்கு அண்மையில் உள்ள ஆலயத்திற்கு நித்திய பூஜையினை மேற்கொள்ளக் கூடிய பிராமண அர்ச்சகர் தேவை. தங்குமிட வசதிகளுடன் சம்பள விடயங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 724 5931

கச்சேரி நல்லூர் வீதி தேவஸ்தானம்

(6125)

## மணமகன் தேவை

1993 இல் பிறந்த சதய நட்சத்திரத்துடன் கூடிய மணப் பெண்ணிற்கு மணமகன் தேவை.

எதிர்பார்ப்பு : வெளிநாடு மட்டும்.

**075 392 1524**

**076 655 9480**

(1791)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3000/- |
| 11-16 Kg | 2400/- |
| 21-22 Kg | 2380/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4543)

UK 11Kg - 1400/- | France 11Kg - 2180/- | Germany 11Kg - 2030/-
Swiss 11Kg - 2530/- | Australia 11Kg - 2180/- | Italy 11Kg - 2310/-

எமது நேரடி கிளைகள்

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

(மேசன் - கூலி)

**072 037 3559**

(6124)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




அமரர்

## திருமதி விநாயகமூர்த்தி ஜெயராணி (ஜெயா)

(விஜயா பல்பொருள் வாணிபம் – உடையார்கட்டு)

**திதி : அமரபக்க ஸப்தமி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று 11.12.2025 வியாழக்கிழமை உடையார்கட்டு வடக்கில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

11.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்தவேளை எம்முடன் பல வழிகளிலும் நேரிலும் தொலைபேசி மூலமும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் செலுத்தி துயர்பகிர்ந்தோர்க்கும் உடையார்கட்டு வர்த்தக சங்கத்தினரின் அஞ்சலிகளுக்கும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு நிலைய வைத்தியர்கள், தாதிமார் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விஜயா பல்பொருள் வாணிபம்,
உடையார்கட்டு.
077 828 1102

தகவல் :
குடும்பத்தினர்

(6115)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org